பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

16 08 2026 7 15

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, ராஜஸ்தான் மாநிலம் ஆல்வரில் 6 ஆயிரத்து 262 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு இன்று அடிக்கல் நாட்டுகிறார்.

2. பழங்குடியின சமுதாயத்தின் மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய பழங்குடியினர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. ஜுவல் ஓரம் தெரிவித்துள்ளார்.

3. இந்தியாவின் பெருமையை உலகறியச் செய்யும் வகையில் பல்வேறு நாடுகள் வழியாக Suryaptha Tiranga பேரணி நடத்தப்படுவதாக மத்திய கலாச்சார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

4. லெபனான் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 11 பேர் உயிரிழந்துள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

5. அருணாச்சலப்பிரதேசம், ஒடிசா, உத்தராகண்ட் மாநிலங்களின் ஓரிரு இடங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

ராஜஸ்தான் மாநிலத்தில் 6 ஆயிரத்து 262 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட உள்ளதாக மத்திய கூட்டுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஆல்வாரில் புதிய பால் உற்பத்தி நிலைய கட்டுமானப் பணிகளுக்கு மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று அடிக்கல் நாட்டுகிறார்.

அம்மாநிலத்தில் பல்வேறு கூட்டுறவு சங்கங்கள் சார்பில் உருவாக்கப்பட்டுள்ள பால் பதனிடும் ஆலைகள் மற்றும் மாட்டுத் தீவன உற்பத்தி ஆலைகளை காணொலி வாயிலாக இன்று அவர் திறந்து வைக்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் புதிய மத்திய கூட்டுறவு வங்கிகளை அமைப்பதற்கான அறிவிப்பையும் திரு. அமித் ஷா வெளியிடுவார் என அவர் மேலும் கூறுகிறார்.

பின்னர் அங்கு நடைபெறும் வேலைவாய்ப்பு முகாமில் 10 ஆயிரத்து 500க்கும் அதிகமானோருக்கு பணிநியமன ஆணைகளை திரு. அமித் ஷா வழங்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

பழங்குடியின சமுதாயத்தின் மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய பழங்குடியினர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. ஜுவல் ஓரம் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், பழங்குடியின மேம்பாட்டு திட்டங்களை வலுப்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்த இரண்டு புத்தகங்களை வெளியிட்டார்.

ஒருங்கிணைந்த பழங்குடியின மேம்பாட்டு முகமை மற்றும் திட்டங்கள் மூலம் நாடு முழுவதும் மாவட்ட அளவில் பழங்குடியின மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கான திட்டங்களை செயல்படுத்துவது குறித்து இதில் விரிவாக விளக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

<<<<>>>>

நாட்டின் சுதந்திர தினத்தை உலக அளவில் கொண்டாடும் வகையில் Suryapath Tiranga பேரணி நடத்தப்பட்டு வருகிறது.

ஃபிஜி தலைநகர் சுவா-வில் நேற்று தொடங்கிய பேரணி, நியூசிலாந்து, ஆஸ்திரேலியா, ஜப்பான், கொரியா, சீனா, இந்தோனேஷியா, வியட்நாம், சிங்கப்பூர்,

மலேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகள் வழியாக மியான்மர் நாடுகள் வழியாக செல்கிறது.

இந்தப் பேரணி பங்களாதேஷ், பூடான், நேபாள், இலங்கை வழியாக மாலத்தீவு சென்றடைகிறது.

வேற்றுமையில் ஒற்றுமை மற்றும் இந்தியாவின் பெருமையை உலகின் பல்வேறு பகுதிகளில் எடுத்துரைக்கும் வகையில் நடத்தப்படுவதாக மத்திய கலாச்சார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

நாட்டின் சுதந்திர தின கொண்டாட்டத்தின் பெருமையை தனித்துவமான முறையில் உலகறியச் செய்யும் வகையில் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

குடியரசுத்தலைவர் மாளிகை வளாகத்தில் உள்ள அம்ரித் உதயன் பூங்கா பொதுமக்கள் பார்வைக்காக இன்று திறக்கப்படுகிறது.

இன்று முதல் அடுத்த மாதம் 15ஆம் தேதி வரை இந்தப் பூங்காவை பொதுமக்கள் பார்வையிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை இந்தப் பூங்கா திறந்திருக்கும் என்றும், வாரம்தோறும் திங்கட்கிழமைகளில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள ஏதுவாக பூங்கா மூடப்படும் என்றும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரின் பூஞ்ச் மாவட்டத்தில் தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாக கிடைத்த தகவலின்பேரில் பாதுகாப்பு படையினர் அங்கு தீவிர தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இந்த தேடுதல் நடவடிக்கையின்போது ஏராளமான ஆயுதங்கள், வெடிபொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

நாட்டின் முன்னேற்றத்திற்காக அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் மற்றும் சமூக சேவையில் ஈடுபடுத்திக்கொண்டுள்ள தன்னார்வலர்களுக்கு மத்திய இளையோர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா பாராட்டு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் சுதந்திர தின விழாவின் ஒரு பகுதியாக நடைபெற்ற மை பாரத் - நாட்டு நலப்பணித் திட்ட தன்னார்வலர்களுடன் அவர் கலந்துரையாடினார்.

சுயசார்பு கொண்ட நாடாக இந்தியாவை உருவெடுக்கச் செய்ய இளைஞர்கள் அர்ப்பணிப்பு உணர்வு, புதுமையான யோசனைகளுடன் செயல்பட வேண்டியது அவசியம் என்று தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற நிகழ்ச்சிகள் இளைஞர்கள் தங்களது அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதற்கான தளமாக அமைந்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் வளர்ச்சியில் இளைஞர்கள் பங்கேற்கும் வகையில் பல்வேறு வாய்ப்புகளை மத்திய இளையோர் நல அமைச்சகம் உருவாக்கி வருவதாக திரு. மன்சுக் மாண்டவியா கூறினார்.

<<<<>>>>

தில்லியில் இயக்கப்பட்டு வரும் பேருந்துகளில் மகளிருக்கு கட்டணமில்லா பயணத்திற்காக காகித வடிவில் வழங்கப்படும் இளஞ்சிவப்பு பயணச்சீட்டு வசதியை இம்மாதம் 31ஆம் தேதி வரை நீட்டிக்கப்படும் என்று தில்லி போக்குவரத்துக் கழகம் தெரிவித்துள்ளது.

மின்னணு பயண அட்டை முறை கட்டாயமாக்கப்பட்டுள்ள நிலையில், அதனைப் பெறும் வகையில் இந்த கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதுவரை 18 லட்சம் இளஞ்சிவப்பு மின்னணு பயண அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறுகிறார்.

மின்னணு பயணச் சீட்டை விரைவாக விநியோகிக்கும் வகையில் தில்லி முழுவதும் 50 அங்கீகரிக்கப்பட்ட மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

<<<<>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்டுவதற்கு மாணவர்களின் பங்களிப்பு அவசியம் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், மாணவர்கள் கல்வியில் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

கல்வியுடன் விளையாட்டு உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் சம அளவில் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

நாட்டின் வளர்ச்சிக்கு அறிவு, ஒழுக்கம், தன்னம்பிக்கை, அர்ப்பணிப்பு உணர்வுடன் மாணவர்கள் பங்காற்ற முன்வர வேண்டும் என்று திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதனிடையே பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக இரண்டு நாள் பயணமாக குடியரசு துணைத்தலைவர் இன்று தமிழகம் வருகிறார்.

<<<<>>>>

ஜிம்பாப்வேயில் உள்ள கரீபா ஏரியில் அளவுக்கு அதிகமான பயணிகளுடன் சென்று படகு கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 72ஆக அதிகரித்துள்ளது.

இந்த விபத்தையடுத்து இதுவரை 26 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு காவல்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எனினும் இந்த படகில் பயணம் செய்தவர்களின் எண்ணிக்கை குறித்த விவரங்கள் தெரியவரவில்லை.

<<<<>>>>

அமெரிக்காவின் மிச்சிகன் மாகாணத்தில் நடைபெற்ற துப்பாக்கிச்சூடு சம்பவத்தில் 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த துப்பாக்கிச்சூடு சம்பவத்தில் காயமடைந்த 13 வயது சிறுமி சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும், துப்பாக்கிச்சூடு நடத்திய நபர் உயிரிழந்த நிலையில் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் காவல்துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

<<<<>>>>

லெபனான் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 11 பேர் உயிரிழந்துள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

தெற்கு லெபனான் பகுதியில் உள்ள ஹெஸ்புல்லா தீவிரவாத அமைப்பின் கட்டமைப்புகளை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக அந்த செய்திகள் மேலும் கூறுகிறது.

இஸ்ரேல் ராணுவத்தின் மீது ஹெஸ்புல்லா தீவிரவாத அமைப்பு நடத்திய தாக்குதலையடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

அருணாச்சலப்பிரதேசம், ஒடிசா, உத்தராகண்ட் மாநிலங்களின் ஓரிரு இடங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சத்தீஸ்கட், குஜராத், ஹிமாச்சல்பிரதேசம், ஜார்கண்ட், மகாராஷ்டிரா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களின் ஓரிரு இடங்களில் இன்று மிதமானது முதல் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

அந்தமான் நிகோபார் தீவுகள், ஆந்திரப்பிரதேசம், மேற்குவங்கம், கர்நாடகா, தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளின் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை மையம் கூறியுள்ளது.

இதனிடையே அருணாச்சலப்பிரதேச மாநிலம் Uppers Subansiri மாவட்டத்தில் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 4 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் அப்பகுதியில் உள்ள ஆறுகளில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் அடித்துச் செல்லப்பட்ட 5 ராணுவ வீரர்களை தேடும் பணி நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் மேலும் கூறுகிறார்.

<<<<>>>>

பெல்ஜியத்தில் நடைபெற்ற Flanders Grand Prix ஸ்கேட்டிங் போட்டியின், ஆடவர் ஆயிரம் மீட்டர் பிரிவில், இந்தியாவின் வேல்குமார் ஆனந்தகுமார் தங்கப்பதக்கம் வென்றார்.

---------------

புனேயில் நடைபெற்று வரும் தேசிய ஜூனியர் மகளிர் ஹாக்கிப் போட்டியில், நேற்று நடைபெற்ற லீக் சுற்றுப் போட்டிகளில், கர்நாடகா, பீகார், மிசோரம், அசாம், குஜராத், தாத்ரா & நாகர் ஹவேலி, டாமன் & டையூ அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

**<<<< >>>>**